நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மயிலாடுதுறை

முன்னிலை : திரு. M. ராஜேஷ்கண்ணா M.A., LL.M.,

நீதித்துறை நடுவர் எண்.2

மயிலாடுதுறை.

2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 12 ஆம் நாள்

2026 ம் வருடம் மார்ச் மாதம் 26-ம் நாள் வியாழக்கிழமை

*******

**Crl.M.P. No.2275/2025**

**in**

**Cr. No.149/2025**

மணிகண்டன், வயது -37/2025,
த/பெ. ராகவன்,
எண். 16 மேலவீதி,
பெருஞ்சேரி,
குத்தாலம் தாலுக்கா,
மயிலாடுதுறை மாவட்டம். ..... மனுதாரர்/எதிரி

// எதிர் //

காவல் உதவி ஆய்வாளர்,
பாலையூர் காவல் நிலையம்,
குற்ற எண்.149/2025,
U/s. 4(1) (B) TNP Amendment Act2024 ..... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 17.03.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. அறிவொளி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**// உத்தரவு//**

மனுதாரர் பிரிவு 497, 503 BNSSன் கீழ் வழக்கு சொத்தான TN 82 K 3120 பதிவு எண் கொண்ட Hero Pleasure - VX வாகனத்தை இடைக்காலமாக தன்வசம் ஒப்படைக்ககோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் மனுதாரர் வழக்கின் எதிரி ஆவார் என்றும், தனது சொந்த உபயோகத்திற்காக TN 82 K 3120 பதிவு எண் கொண்ட Hero Pleasure – VX என்ற இருசக்கர வாகனத்தை வாங்கி உபயோகப்படுத்தி வந்ததாகவும், இந்நிலையில் கடந்த 01.08.2025 அன்று தனது வாகனத்தை எடுத்து கொண்டு உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டு கோமல் வழியாக வரும்போது அங்கு வந்த மேற்படி காவல் துறையினர் தனது வாகனத்தை வழிமறித்து நிறுத்தி சோதனை செய்ததாகவும், சோதனை செய்ததில் எவ்வித தடயப்பொருட்களும் கிடைக்கவில்லை என்றும், அரசு புள்ளிவிபர கணக்கிற்காக தன்மீதும், தனது வாகனத்தின் மீதும், மேற்படி காவல் துறையினர் குற்ற எண். 149/2025, U/s. 4(1)(B) TNP Amendment (Transport) Act ன் படி வழக்கு பதிவு செய்து, மேற்படி வழக்கில் தன்னை கைது செய்ததாகவும், மேற்படி காவல் துறையினர் கைபற்றியதாக கூறப்படும் தடய பொருட்கள் தன்னிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும், மேற்படி வழக்கிற்கும், தனக்கும், தனது வாகனத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள தனது இருசக்கர வாகனம் காவல் நிலைய வளாகத்தினுள் இருப்பதால் மழை, வெயில் போன்றவற்றால் அதன் மிக முக்கிய பாகங்கள் பழுதடைந்து உபயோகமற்றதாகிவிடக்கூடும் என்றும், மேலும், தனது மோட்டார் சைக்கில் வாகனம் தனது உபயோகத்திற்கு தேவைப்படுகிறது என்றும், எனவே, தன் வாகனத்தை தன்னிடம் ஒப்படைத்தால் தான் நல்ல முறையில் பாதுகாத்து எந்தவித மாற்றமும் செய்யாமல் நீதிமன்றம் குறிப்பிடும் தேதியில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த தயாராக உள்ளதாகவும், இதுவரை மேற்படி இருசக்கர வாகனத்தை அரசுக்கு ஆதாயம் செய்யக்கோரி எவ்வித அறிவிப்பும் தனக்கு கிடைக்கப்பெறவில்லை என்றும், எனவே, மேற்படி தனது வாகனத்தை இவ்வழக்கு முடியும் முன்பாக தன்னிடம் இடைக்காலமாக தன்வசம் ஒப்படைக்கும்படி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனை :–**

மேற்படி வழக்கு தடயமான TN 82 K 3120 பதிவு எண் கொண்ட Hero Pleasure – VX என்ற வாகனமானது மனுதாரர்/எதிரியிடமிருந்து கடந்த 01.08.2025 அன்று வாகன தணிக்கையின்போது சுமார் 180மிலி பிடிக்கக்கூடிய 30 தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பாண்டி சீல்டு சாராய பாட்டில்கள் கடத்தியதற்காக கைப்பற்றப்பட்டு, மேற்படி இருசக்கர வாகனத்தை அரசுக்கு ஆதாயம் செய்ய பிரிவு–14(4) TNP Amendment

(Transport) Act ன் படி மயிலாடுதுறை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு துணை காவலர் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வேண்டுகோள் அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி வேண்டுகோளின் அடிப்படையில் 29.11.2025 அன்று மயிலாடுதுறை மாவட்ட மதுவிலக்கு அமல்பிரிவு துணை கண்காணிப்பாளரின் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 05/பறிமுதல்/ம.வி.அ.பி/மயிலாடுதுறை/2025ன் படி மேற்படி இருசக்கர வாகனமானது அரசுடைமை ஆக்கப்பட்ட வாகனமாக உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி வாகனத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய இயலவில்லை என்றும், எனவே, மனுதாரர் வசம் ஒப்படைக்க மிகக் கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.** மேற்படி, TN 82 K 3120 பதிவு எண் கொண்ட Hero Pleasure – VX என்ற வாகனம் மனுதாரருக்கு இடைக்கால வசமாக கிடைக்கத்தக்கதா? என்பது இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய அம்சமாகும்.

**5. <u>தீர்வு</u> :–**

TN 82 K 3120 பதிவு எண் கொண்ட Hero Pleasure – VX இருசக்கர வாகனமானது பாலையூர் காவல் நிலைய குற்ற எண்.149/2025, U/s. 4(1)(B) TNP Amendment Act (Transport) Act ன் கீழான வழக்கில் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு, பாலையூர் காவல் நிலைய வளாகத்தில் இருந்து வருவதாகவும், புள்ளிவிபர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றும், மேற்படி வழக்கிற்கும், மனுதாரருக்கும், மனுதாரர் வாகனத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், மனுதாரர் வாகனம், எதிர்மனுதாரர் காவல் நிலையத்தினால் திறந்த வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் மழை, வெயில் போன்றவற்றால் அதன் மிக முக்கிய பாகங்கள் பழுதடைந்து உபயோகமற்றதாகிவிடும் என்றும், வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் மனுதாரர் எந்தவித உருமாற்றம் செய்யாமலும், எவ்வித வில்லங்கத்திற்கு உட்படுத்தாமல் வைத்திருக்கவும், நீதிமன்றத்தில் வழக்கிற்கு தேவைப்படும்போது மேற்படி வாகனத்தை ஆஜர்படுத்திடவும் தயாராக உள்ளதாகவும், இதுவரை மேற்படி, இருசக்கர வாகனத்தை அரசுக்கு ஆதாயம் செய்யக்கோரி எவ்வித அறிவிப்பும் மனுதாரருக்கு கிடைக்கப்பெறவில்லை என்றும், எனவே, மேற்படி

வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க உத்தரவிடக்கோரி வாதிடப்பட்டது.

**6.** மாறாக, மேற்படி வழக்கு தடயமான TN 82 K 3120 பதிவு எண் கொண்ட Hero Pleasure – VX என்ற வாகனமானது மனுதாரர்/எதிரியிடமிருந்து கடந்த 01.08.2025 அன்று வாகன தணிக்கையின்போது சுமார் 180மிலி பிடிக்கக்கூடிய 30 தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பாண்டி சீல்டு சாராய பாட்டில்கள் கடத்தியதற்காக கைப்பற்றப்பட்டு, மேற்படி இருசக்கர வாகனத்தை அரசுக்கு ஆதாயம் செய்ய பிரிவு–14(4) TNP Amendment (Transport) Act ன் படி மயிலாடுதுறை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு துணை காவலர் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வேண்டுகோள் அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி வேண்டுகோளின் அடிப்படையில் 29.11.2025 அன்று மயிலாடுதுறை மாவட்ட மதுவிலக்கு அமல்பிரிவு துணை கண்காணிப்பாளரின் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 05/பறிமுதல்/ம.வி.அ.பி/மயிலாடுதுறை/2025ன் படி மேற்படி இருசக்கர வாகனமானது அரசுடைமை ஆக்கப்பட்ட வாகனமாக உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுதாரர் வசம் ஒப்படைக்க மிகக் கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு சான்றாவணங்களும், மனு மற்றும் ஆட்சேபனை பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயபொருள் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை.**

**7.** மனுதாரர் தனது வாகனத்தின் பதிவு சான்றிதழின் நகலை மனுவுடன் இணைத்து தாக்கல் செய்துள்ளார். TN 82 K 3120 பதிவு எண் கொண்ட Hero Pleasure – VX என்ற வாகனத்தின் பதிவு சான்றிதழில் அதன் உரிமையாளர் பெயர் மணிகண்டன், த/பெ. ராகவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி, ஆவணத்தின் மூலமாக மனுதாரர்தான் வழக்கு தடய பொருளின் உரிமையாளர் என்பது தெரியவருகிறது.

**8.** பாலையூர் காவல் ஆய்வாளர் அவர்களின் பிரிவு 14(4) தமிழ்நாடு மதுவிலக்கு சட்ட வேண்டுகோளின் அடிப்படையில் 29.11.2025 அன்று மயிலாடுதுறை மாவட்ட மதுவிலக்கு அமல்பிரிவு துணை கண்காணிப்பாளரின் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 05/பறிமுதல்/ம.வி.அ.பி/மயிலாடுதுறை/2025ன் படி மனுதாரரின் மேற்படி இருசக்கர வாகனமானது அரசுடைமை ஆக்கப்பட்ட வாகனமாக

உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவு நகலும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மனுதாரரின் இருசக்கர வாகனமானது அரசுடைமை ஆக்கப்பட்ட வாகனமாக மயிலாடுதுறை மாவட்ட மதுவிலக்கு அமல்பிரிவு துணை கண்காணிப்பாளரின் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 05/பறிமுதல்/ம.வி.அ.பி/மயிலாடுதுறை/2025ன் படி உத்தரவிடப்பட்ட நிலையில், மனுதாரரின் இம்மனு அனுமதிக்கதக்கது அல்ல என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, மனுதாரர்/எதிரியின் இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJESHKANNA M
Digitally signed by RAJESHKANNA M
Date: 2026.03.26 18:51:22 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
மயிலாடுதுறை.

<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u> – இல்லை –

RAJESHKANNA M
Digitally signed by RAJESHKANNA M
Date: 2026.03.26 18:51:29 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
மயிலாடுதுறை.